# இன்று தவக்காலம் முதலாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - A

# 2023-02-26

*(இன்றைய வாசகங்கள்:*

*தொடக்க நூலிலிருந்து வாசகம்* 2: 7-9, 3: 1-7, *திருப்பாடல்* 51: 1-2. 3-4. 10-11. 12,15,

*திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 5: 12-19,

*மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 4: 1-11)

***திருப்பலி முன்னுரை***

*இறை இயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று தவக்காலம் முதலாம் ஞாயிறு வழிபாட்டைச் சிறைப்பிக்க வந்துள்ள உங்கள் அறைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள். இன்றைய நற்செய்தியில் இயேசு அலகையினால் சோதிக்கப்படுவதைக் காண்கின்றோம். உணவு, புகழ், ஆற்றல் என மூன்று விதமான சோதனைகளுக்கு இறைமகனை உட்படுத்துகின்றது. இயேசு அலகையினால் வீழ்ந்து விடாமல் தூய ஆவியின் துணையோடும், உறுதியோடும் அனைத்தையும் வெல்கின்றார். நாமும் அத்தகைய சோதனைகளுக்கு ஆளாகின்றோம்.*

*முதலாவதாக, அழிந்து போகும் உணவிற்காக ஓடி ஓடி உழைத்திடும் நாம், அழியாத வாழ்வு தரும் இறைவனை பல தருணங்களில் மறந்து விடுகின்றோம். அவரது வார்த்தைகளை வாசிக்கத், தியானிக்க நேரமின்றி வாழ்கின்றோம். இரண்டாவதாக, பணம், பதவி, புகழ் இவற்றிற்கு அடிமையானவர்களாக, அவற்றை அடைய பல பாவ வழிகளில் ஈடுபடுகின்றோம்.*

*மூன்றாவதாக, நமக்கு வேண்டியவை நிறைவேறாவிட்டால் இறைவனைப் பழிக்கின்றோம். அவருக்கு நிபந்தனை விதிக்கின்றோம். தொடக்கத்திலே இஸ்ராயேல் மக்கள், இறைவனைப் பாலைநிலத்தில் சோதித்து இறைவனின் சினத்திற்கும், தண்டணைக்கும் ஆளாக்கினர். அவர்களைப் போல நாமும் இறைவனைச் சோதித்தல் ஆகாது. "நாம் ஒவ்வொருவரும் நம் சொந்தத் தீய நாட்டங்களின் பொருட்டே சோதிக்கப்படுகின்றோம். அதனால், இச்சோதனை இறைவனிடமிருந்து வருகிறது என யாரும் சொல்லலாகாது" என யாக்கோபு கூறுகின்றார். ஆதிப்பெற்றோரும் இதனாலேயே பாவத்தில் வீழ்ந்தனர். நாமும் அத்தகைய சோதனைகள் வரும்போது, அதிலே சோர்ந்துவிடாமல், தளர்ந்துவிடாமல் இறைமகனைப்போல் எத்தகைய நிலையிலும் உறுதியுடனிருப்போம். இறைவன் நமக்குத் துணையிருக்கின்றார். உதவிடுவார் என்ற ஆழமான விசுவாச உணர்வினை, நம்பிக்கையினைப் பெற்றிட தூய ஆவியின் ஆற்றல் வேண்டி, இக்கல்வாரிப் பலியில் இணைந்திடுவோம்.*

*விசுவாசிகள் மன்றாட்டுகள்:*

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*அருள் பொழிகின்ற இறைவா,*

*பணம், பதவி, புகழ் போன்ற உலக மாயைகளில் இருந்து விலகி வாழும் வரத்தை, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் வழங்கி, உம் மக்களை புனிதத்தின் பாதையில் வழிநடத்த உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.*

*உறுதிதரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை வழங்குகின்ற தந்தையே இறைவா!*

*திருச்சபையின் உறுப்பினராய் இருக்கும் எங்களுக்கு உம்முடைய கட்டளைகளுக்கும், அறிவுரைகளுக்கும் ஏற்றபடி வாழுகின்ற தன்னார்வ மனத்தினை அளித்து: உறுதி தரும் ஆவியை, புதுப்பிக்கும் ஆவியை எமக்குள்ளே உருவாக்கியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*உமது வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் மனிதரை வாழவைக்கும் தந்தையே இறைவா!*

*உலகில் பசியாலும், பட்டினியாலும் வாடுகின்ற அனைவரினதும் தேவைகளைப் புரிந்துகொண்டு, நீர் எமக்குத் தரும் வளங்களை, நாம் சரியான முறையில் பயன்படுத்தி, அடுத்தவரின் பசிபோக்கும் செயற்றிட்டங்களில் அர்ப்பணிப்போடு ஈடுபடுவதற்கு வேண்டிய நல்லுள்ளத்தை எமக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

மாற்றம் தருகின்ற இறைவா,

வாழ்வைத் திசைமாற்றும் இவ்வுலகின் மாயக் கவர்ச்சிகளாலும், தீவிரவாத செயல்களாலும் தங்கள் வாழ்வை சீரழித்து நிற்கும் இளைஞர்களும், அவர்களை தவறான வழியில் நடத்துபவர்களும் மனந்திரும்ப உதவுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

தூயவரான தந்தையே இறைவா!

உலக நாடுகளில் வேகமாகப் பரவிவரும் ஒழுக்கச் சீர்கேடுகள் இல்லாது போகவும், அனைவரும் நீர் காட்டும் ஒழுக்க நெறியின்படி வாழவும் சாத்தானின் செயற்றிட்டங்களை முறியடித்து புதுவாழ்வு வாழ்வதற்கு வேண்டியஅருள் உதவிகளை அனைவருக்கும் அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

உண்மையின் உறைவிடமே இறைவா,

உலக ஞானத்தின் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டு அழிவுக்குரிய நெறிகளைப் பின்பற்றி வாழும் எம் நாட்டவர் அனைவரும், உம்மிடம் மனந்திரும்பி வர உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

இறைவா!

மீண்டும் உலகை வாட்டிவதைக்கும் இந்த தொற்று நோயிலிருந்து உலகமக்களை காப்பாற்றும். இழந்த வாழ்வை மீண்டும் பெற்று வளமையோடு புதுப்பொழிவோடும் உமது சாட்சிகளாக வலம் வரத் தேவையான அருளைப் பொழியுமாறு உயிர்த்த இயேசுவின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

வாழ்வின் வழியே இறைவா,

கொலை, விபசாரம் போன்ற தீமைகளின் பிடியில் சிக்கி உமது திட்டத்துக்கு எதிராக செயல்படுவோர் அனைவருக்கும், தூய வாழ்வுக்கான வழியைக் காட்ட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.